வரவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் நடுவர் தீர்ப்புக்கு விடுவதாக இருந்தாலும் மத்திய அரசுதான் செய்ய வேண்டும். பேச்சு வார்த்தைகளின் மூலம் ஒரு ஒற்றுமையைக் காண முடியும் என்றாலும், அதை மத்திய அரசுதான் உடனடியாக நிறைவேற்றியாக வேண்டும். இப்படி எந்தக் காரியத்தை இதிலே செய்ய வேண்டுமென்றாலும், 3 மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால், இந்திய அரசு உடனடியாக இதிலே கவனம் செலுத்துவதன்மூலம்தான் இதிலே தீர்வு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. அவர்கள் அந்த வகையிலே தீர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிறபொழுது — கிருஷ்ணராஜசாகருக்கும் — கர்நாடகத்திலே இருக்கிறவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன் காவிரி என்கிறபொழுது, இந்தக் காவிரி பகுதியிலே வாழ்கிற மக்கள் அனைவருக்கும் சேர்த்துத்தான் நாம் பேசுகின்றோம். ஏற்கனவே பயன்படுத்துகின்றவர்களுக்கு அந்த முன்னுரிமையைத் தருவது, பற்றாக்குறை ஆண்டுகளில் மிகமிக இன்றியமையாதது. இன்றைக்கு நாம் கஷ்டப்படுவதற்கே காரணம், கர்நாடக மாநிலத்திலே உள்ள நீர்த் தேக்கங்களிலே நீரைத் தேக்கி வைப்பதன் காரணமாக, ஏற்கனவே பயன்படுத்திக் கொண்டிருந்த பகுதி மக்களுக்கு, இன்றைக்கு அந்தத் தண்ணீர் கிடைக்கவில்லையென்ற குறைதான். ஆகையினாலே அதைப் புரிந்துகொண்டு இதற்குத் தக்க முறையிலே கர்நாடக அரசும் நமக்கு உதவி செய்யும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நான் நேரிலே அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் கடிதம் எழுதி இருக்கிறார்கள். கர்நாடக அரசும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கனவே கேட்டுக்கொண்டதற்கிணங்க, 12 டி. எம். சி. தந்தார்கள். அதற்குப் பிறகும் கொஞ்சம் தண்ணீர் வந்தது. அவர்களாலே உடனடியாக 36 டி. எம். சி. தர முடியும். அதை விரைவிலே தருவார்களானால், தஞ்சையைக் காப்பாற்றுவதற்கும் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற பேரிழப்பைச் சரி செய்வதற்கும் அது உதவி செய்யும். அதற்கான நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.. ஆகவே, அந்த அளவிற்கு இந்த விவாதம் பயன்பட்டது என்கின்ற காரணத்தினால் இத்துடன் அதை நிறுத்திக் கொள்ளலாம் என்று தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(இரவு 9.10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(இ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

1982 செப்டம்பர் 10]]டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

''பேரவை விதி 25 (1)—ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர் இரவு 9-11 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

99. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு மரத்தடிகளை எடுத்துச் செல்லுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத்துறையின் 15-4-1981 ஆம் தேதியிடப் பெற்ற 438 ஆம் என அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

100. தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு மரத்தடிகளை எடுத்துச் செல்லுதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வன-மீனளத் துறையின் 30-[illegible]-1981-ஆம் தேதியிடப் பெற்ற 919-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

101. வட ஆற்காடு மாவட்டம், கரகிரியிலுள்ள விப்லின் தொழுநோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான சில வண்டிகளுக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்த அனுமதிப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 7-5-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1129-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).